*3*

# மூன்று இராணுவங்களைக் காப்பாற்றிய மனிதன்

## (2 இராஜாக்கள் 3:1-27)

*நமது முந்தைய பாடம் "பெரிய காரியங்களைச் செய்த மனிதன்" என்பதாயிருந்தது. அந்த பாடத்தில் படித்த - கெட்ட தண்ணீரை நல்ல தண்ணீராக்கினது மற்றும் கேலிக்கார கும்பலை சபித்தது ஆகிய அற்புதங்களை சிலர் "சிறிய அற்புதங்கள்" என வகைப்படுத்தலாம். இந்த பாடத்தில் நாம் காணப்போகிறபடி, தேவனை பொருத்தவரை, "பெரிய" மற்றும் "சிறிய" அற்புதங்கள் ஒன்றுபோலவே இருக்கின்றன. இருப்பினும், அற்புதங்களை வகைப்படுத்துகிறவருக்கு இந்த பாடத்தில் எலிசா செய்தது "பெரிய" அற்புதமாக இருக்கிறது: தேவன் மூன்று இராஜாக்கள் மற்றும் அவர்களுடைய இராணுவத்தைக் காப்பாற்ற - இஸ்ரவேலின் இராஜாவாகிய யோராம்* (Jehoram) *உட்பட - தீர்க்கதரிசியை பயன்படுத்தினார்.*

*எலிசா எலியாவிடம் ஊழிய பயிற்சி எடுத்துக்கொண்டது ஆகாபின் ஆட்சியில் துவங்கி, சிறிது காலம் அரசாண்ட அவன் மகன் அகசியா ஆட்சி காலம் வரை தொடர்ந்திருந்தது. எலிசாவின் சொந்த ஊழியமானது, ஆகாபின் மற்ற குமாரனான யோராமின்* (Jehoram) *ஆட்சி காலத்துவக்கத்தில் துவங்கியது. தீர்க்கதரிசியின் ஊழியம் யெகூ, யோவாகாஸ், யோவாஸ் ஆகியோரின் ஆட்சி காலத்தில் தொடர்ந்து இருந்தது. குறிப்பிட்டபடி, இந்த பாடத்தில் எடுத்துரைக்கப்படும் சம்பவம் யோராமின்* (Jehoram) *ஆட்சி காலத்தில் நடந்தது.*

*எலிசாவின் வாழ்வில் நடந்த சம்பவங்கள் எப்போதும் காலகிரமத்தின்படி ஒழுங்கு செய்யப்படவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். உதாரணமாக, 2 இராஜாக்கள் 5ஆம் அதிகாரத்தில், கேயாசி ஒரு தொழுநோயாளியாக மாறியிருந்தார் (வசனம் 27), ஆனால் அதிகாரம் 8இல் கேயாசி இராஜாவின் சமூகத்தில் இருந்தார் (வசனம் 4) - அவர் ஏற்கெனவே தொழுநோயாளியாக இருந்திருந்தால், இது சாத்தியமாக இருக்க வில்லை. மேலும், யோவாஸ் இராஜாவின் மரணம் சொல்லப்பட்டதையடுத்து (13:13) அவன் எலிசாவை சந்தித்த சம்பவம் சொல்லப்பட்டுள்ளது (வசனங்கள் 14-19). ஆகவே, எலிசாவின் வாழ்க்கையில் இப்போது நாம் படிக்கும் சம்பவம் எங்கே பொருந்துகிறது என நமக்கு உறுதியாக தெரியவில்லை. 2 நாளாகமம் 21:12-15இன்படி, யோசபாத் மரணமடைந்தபின் யோசபாத்தின் குமாரனுக்கு எலியாவிடமிருந்து ஒரு கடிதம் வருகிறது. ஆனால் 2 இராஜாக்கள் 3 (வசனம் 7)இல் சொல்லப்படும் கதையில் யோசபாத் ஒரு பகுதியாக இருக்கிறார். 2 இராஜாக்கள் 3ஆம் அதிகாரத்தில் சொல்லப்படும் இராணுவ படையெடுப்பு நடக்கையில், எலியா இன்னமும் உயிரோடிருந்தார் என்பதை இது காட்டுகிறது - மற்றும் எலிசா அவருடைய*

*பிரதிநிதியாக இராணுவத்தோடு இருந்தார் என்பதை சுட்டிக்காட்டுகிறது.*

*துல்லியமான காலக்கிரம ஒழுங்கு முக்கியமானதல்ல. வேதாகமத்தில் சம்பவங்கள் சொல்லப்பட்டுள்ளது காலக்கிரமப்படி இருக்காது, ஆனால் அது ஒருபோதும் ஒழுங்கில்லாமல் இராது. எலிசா எப்படி அவருடைய நாட்களில் இருந்த அதிகாரிகளோடு செயல்பட்டார் என்பதை விளக்குவதற்கு இப்போது இந்த கதை சொல்லப்பட்டுள்ளது. தேவன் எப்படி தமது பிள்ளைகளை பாதுகாப்பதற்கு அவரை பயன்படுத்தினார் என்பதை விளக்குவதற்கு இது இந்த பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.*

## *ஒரு தாங்கமுடியாத சூழ்நிலை (3:1-10)*

*2 இராஜாக்கள் 1ஆம் அதிகாரத்தில் "அகசியா இறந்துபோனான்" என பதியப்பட்டுள்ளது (வசனம் 17அ). இவன் தன் தந்தை ஆகாபின் மரணத்தையடுத்து வட இராஜ்யமாகிய இஸ்ரவேலில் இராஜாவாகி கி.மு. 853-52 வாக்கில் இரண்டு வருடம் அரசாண்டான் (காண்க 1 இராஜாக்கள் 22:40, 51). அகசியா மரித்தபோது, "அவனுக்கு குமாரன் இல்லாதபடியினால், யோராம் [ஆகாபின் அடுத்த மூத்த மகன்] அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்" (2 இராஜாக்கள் 1:17ஆ). இது, "யூதாவின் இராஜாவாகிய யோசபாத்துடைய குமாரனான யோராமின் இரண்டாம் வருஷத்திலே நடந்தது" (வசனம் 17இ).*

*ஒரு நிமிடம் பொறுங்கள்!* யோராமின் *இரண்டாம் வருடத்தில்* யோராம் *ஆளத்துவங்கினான்? எலியாவின் ஊழியம் பிரிவுபட்ட இராஜ்யத்தின் காலத்தில் இருந்தது என்பதை நினைவில் வையுங்கள்: வட இராஜ்யமாகிய இஸ்ரவேல் (எலிசா வாழ்ந்து ஊழியம் செய்த பகுதி), மற்றும் தென் இராஜ்யமாகிய யூதா ஆகிய பகுதிகளில் ராஜாக்கள் இருந்தார்கள். இஸ்ரவேலில் யோராம் ஆட்சி செய்கையில், யூதாவில் யோராம் என்பவர் தன் தந்தையோடு ஆட்சி செய்து கொண்டிருந்தார் (ஒப்பிடுக 2 இராஜாக்கள் 1:17 மற்றும் 3:1). எவ்வளவு குழப்ப மாயிருக்கிறது! யூதாவின் (தென்பகுதி) ராஜாவை "யோராம்"* (Jehoram) *எனவும் இஸ்ரவேல் (வடபகுதி) ராஜாவை "யோராம்"* (Joram) *என சுருக்கி அழைப்பதும் ஒரு வேளை உதவியாக இருக்கலாம்.*

*இரண்டு இராஜாக்கள் 3 ராஜாவாகிய யோராமின்* (Joram) *கதையை கூறத்துவங்குகிறது.*

> *யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தின் பதினெட்டாம் வருஷத்தில் ஆகாபின் குமாரனாகிய யோராம் சமாரியாவிலே இஸ்ரவேலின் மேல் ராஜாவாகிப் பன்னிரண்டு வருஷம் [கி.மு. 852-841 வரை] ராஜ்யபாரம்பண்ணி, கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தான்; ஆனாலும் தன் தகப்பனைப்போலும் தன் தாயைப்போலுமல்ல; தன் தகப்பன் பண்ணுவித்த பாகாலின் சிலையை அகற்றிவிட்டான் (வசனங்கள் 1, 2).*

*ஆகாப் பாகாலுக்கு தான் கட்டின கோவிலில் அதற்கென ஒரு சிலையை செய்வித்திருந்தான் (காண்க 1 இராஜாக்கள் 16:32). யோராம் அந்த சிலையை அகற்றிவிட்டான், ஆனால் அழிக்கவில்லை. (யெகூ அதை எதிர்காலத்தில் அகற்றி அழிக்கவேண்டியதாயிருந்தது; காண்க 2 இராஜாக்கள் 10:27.)*

*“என்றாலும் இஸ்ரவேலை பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாமின் பாவங்களை அவன் விட்டு நீங்காமல் அவைகளிலே சிக்கிக்கொண்டிருந்தான்” என்று 2 இராஜாக்களின் எழுத்தாளர் கூறுகிறார் (3:3). வேறு வார்த்தையில் கூறுவதென்றால், யெரோபெயாம் பெத்தேல் மற்றும் தாணில் நிறுவிய பொற்கன்றுக் குட்டிகளை தன் மக்கள் வணங்குவதை அவன் உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தான் (காண்க 1 இராஜாக்கள் 12:26-33; 13:33). அப்படிச்செய்வது அவனுக்கு அரசியல் ரீதியான அனுகூலமாக இருந்தது.*

***ஒரு பிரச்சனை***

*இது தான் பின்னனி; இப்போது நாம் நமது பாடத்திற்கு தயாராகிவிட்டோம். “மோவாபின் ராஜாவாகிய மேசா ஆடுமாடுகள் பெருத்தவனாயிருந்து, இஸ்ரவேலின் ராஜாவுக்கு இலட்சம் ஆட்டுக்குட்டிகளையும், இலட்சம் குறும்பாட்டுக்குட்டிகளையும் செலுத்திவந்தான்” (2 இராஜாக்கள் 3:4).[1] இஸ்ரவேலின் வடகிழக்கு எல்லையில் அமைந்திருந்த (எலிசாவின் நாட்களில் இஸ்ரவேல் மற்றும் சுற்றுப்புற தேசங்களின் வரைபடத்தை காண்க), மோவாப் தாவீது ராஜாவால் தோற்கடிக்கப்பட்டு காணிக்கை/கப்பம் கட்டும்படி செய்யப்பட்டிருந்தது (1 நாளாகமம் 18:1, 2). “ஆகாப் இறந்துபோனபின் மோவாபின் ராஜா இஸ்ரவேலின் ராஜாவுக்கு விரோதமாய் கலகம் பண்ணினான்” (2 இராஜாக்கள் 3:5; காண்க 1:1). ஆகாபின் மரணத்தையடுத்த குழப்பமான காலத்தை (குறுகிய கால அகசியாவின் ஆட்சியின் போதும்) மேசா வரிசெலுத்தாமல் இருப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தினான்.*

*யோராம் ஆட்சிக்கு வந்தபோது, மதிப்புமிக்க வருவாய் ஆதாரங்களை புதுப்பிக்க தீர்மானமாயிருந்தான். முதலில் அவன் இஸ்ரவேலில் ஒரு சேனையை ஏற்படுத்தினான் (3:6). பின், யூதாவின் ராஜாவாகிய யோசபாத்திற்கு ஒரு செய்தியை அனுப்பினான் (வசனம் 7அ). யோராம் மோவாபை தென் பகுதியிலிருந்து தாக்க விரும்பினான் (வசனம் 8) - ஏனெனில் மோவாபின் தென்பகுதியை காட்டிலும் வடபகுதி உறுதியான பாதுகாப்பு ஏற்பாடுகளை கொண்டிருந்தது. அதை செய்வதற்கு அவர் யூதா வழியாக கடந்து செல்ல வேண்டியிருந்தது. அவன் யூதாவின் ராஜா யோசபாத்திடம் ஒரு வேண்டுகோள் வைத்தான்: “மோவாபின் ராஜா எனக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினான்; மோவாபியர் மேல் யுத்தம் பண்ண, என்னோடுகூட வருகிறீரா?” என்று கேட்டனுப்பினான் (வசனம் 7ஆ).*

*முன்னதாக, யோராமின் தந்தை ஆகாப் ஆராமுக்கு (சீரியா) விரோதமாய் யுத்தம் செய்வதற்கு யோசபாத்தை கூலி பொருத்தியிருந்தான் (காண்க 1 இராஜாக்கள் 22:1-40). யோசபாத், ஆகாப் மற்றும் அகசியாவோடு செய்து கொண்ட ஒப்பந்தத்திற்காக கடிந்துகொள்ளப்பட்டிருந்தான். (காண்க 2 நாளாகமம் 19:1, 2; 20:35-37), ஆனால் அவர் காரியங்களை மெதுவாய் கற்றுக்கொள்கிறவராக இருந்தார். அவன் யோராமோடு யுத்தத்திற்குச் செல்ல சம்மதித்தான் (2 இராஜாக்கள் 3:7இ; ஒப்பிடுக 1 இராஜாக்கள் 22:4). இதற்கான ஒரு காரணம் மோவாப் சமீபத்தில் தன் நாட்டை தாக்கியதாக இருக்கலாம் (காண்க 2 நாளாகமம் 20:1-30) மற்றும் அது பற்றி அவன் இன்னும் கோபமாக இருந்தான்.[2]*

**ஒரு திட்டம்**

யோசபாத், யோராமின் போர் யுக்தி பற்றி கேட்டான்: "எந்த வழியாய்ப் [மோவாபிற்கு] போவோம்?" என்று கேட்டான் (2 இராஜாக்கள் 3:8அ). அதற்கு அவன், "ஏதோம் வனாந்திர வழியாய்" என்றான் (வசனம் 8ஆ). யூதாவின் வழியாக தெற்கு நோக்கி சென்று, கிழக்கு திசையில் சவக்கடலின் தென்முனையை அடைந்து, மோவாபின் தென்திசையில் அமைந்துள்ள ஏதோமுக்குள் செல்வது திட்டமாய் இருந்தது (*எலிசாவின் நாட்களில் இஸ்ரவேல் மற்றும் சுற்றுப்புற தேசங்களின்* வரைபடம் காண்க). ஏதோம் யூதாவின் அடிமை தேசமாயிருந்தபடியால், அங்கே அவர்களுக்கு எதிர்ப்பு இருக்காது. அவர்கள் கூடுதலான படையாட்களை ஏதோமியரிடமிருந்து பணிக்கு அமர்த்த முடியும். பின்னர், ஏதோமிலிருந்து மோவாபின் தென் எல்லையை தாக்கலாம். இது ஒரு நல்ல போர் தந்திரமாக காணப்பட்டது. துக்ககரமாக, கர்த்தர் இது பற்றி என்ன நினைத்தார் என்பதை யாரும் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள அக்கரைப்படவில்லை.

துவக்கத்தில் காரியங்கள் திட்டமிட்டபடி நடந்தன. யோராம் மற்றும் யோசபாத் ஆகியோரின் இராணுவங்கள் ஏதோமை அடைந்தது, அங்கே ஏதோமியரின்[3] இராஜாவும் அவன் சேனையும் இவர்களோடு கூடிக்கொண்டன (வசனம் 9அ). அதன் பிறகு அவர்கள் ஏதாமின் வனாந்தர வழியாய் மோவாபின் தென்பகுதி எல்லை நோக்கி முன்னேறிச் சென்றனர்.

**ஒரு இக்கட்டான நிலை**

மோவாபை காணக்கூடிய அளவு, "ஏதோமின் வனாந்திரத்தை அவர்கள் அடைந்தபோது" (வசனங்கள் 21-24), அவர்கள் ஏழு நாட்கள் பயணம் செய்திருந்தார்கள் (வசனம் 9ஆ) மற்றும், அவர்களுடைய தண்ணீர் விநியோகம் தீர்ந்து போயிருந்தது. புவியியலை நன்கு அறிந்தவர்கள் அந்த பகுதியில் நம்பதகுந்த ஒரு ஆறு ஓடுவதாக கூறுகின்றனர். சந்தேகத்துக்கிடமில்லாமல், யோராம் இராணுவத்திற்கு அந்த ஓடையிலிருந்து தண்ணீர் பெற்று புதுப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தான் - ஆனால் அது வறண்டுபோயிருந்தது.[4] "அவர்களை பின்செல்லுகிற இராணுவத்துக்கும் மிருகஜீவன்களுக்கும் தண்ணீர் இல்லாமற் போயிற்று" (வசனம் 9இ). பொதுவாக, மனிதர்கள் காற்றில்லாமல் மூன்று நிமிடம் வரை உயிர்வாழமுடியும், தண்ணீரின்றி மூன்று நாட்கள் உயிர் வாழ முடியும். மற்றும் உணவின்றி மூன்று வாரங்கள் வரை உயிர் வாழ முடியும்.[5] F. W. குருமாச்சர் என்பவர் சூழ்நிலையை பின்வரும் அதிர்ச்சியான வார்த்தைகளில் படம் பிடித்து காட்டுகிறார்: "மயக்கமுற்ற வீரர்கள் தரையில் தவண்டு விழுந்தனர்; பசி மற்றும் தாகத்தால் களைத்துப் போன குதிரையால் நகரமுடியவில்லை, கழுதைகள் பாரம் தாங்காமல் கீழே நசுங்கிப்போயின."[6] ஒரு சொட்டு இரத்தம் சிந்தப்படுவதற்கு முன்பே கூட்டணி தோல்வியை எதிர்நோக்கியுள்ளது.

யோராமுடைய பதிலுரைப்பு விசுவாசம் இல்லாத, பெலவீனமான விசுவாசமுடையோர் செய்வது போல இருந்தது: அவன் தேவனை குற்றப்படுத்தினான். "ஐயோ! இந்த மூன்று ராஜாக்களையும் கர்த்தர் மோவாபியரின் கையில் ஒப்புக்கொடுக்க வரவழைத்தாரே" என்றான் (வசனம் 10). அவனுடைய யூகங்களை கவனியுங்கள்:

- முதலாவது கர்த்தர் இந்த போர் கூட்டு முயற்சியை அங்கீகரித்தார்.

* இந்த ஆபத்தான நிலைக்கு அவர்களை கொண்டுவந்த திட்டத்திற்கு கர்த்தர் பொறுப்பாளியாய் இருந்தார்.
* அவர்களை அழிக்கும்படி கர்த்தர் இதையெல்லாம் செய்து விட்டார்.

இப்போது நிஜத்தை கவனியுங்கள்:

* இந்த கூட்டு போர் திட்டம் குறித்து கர்த்தரிடத்தில் கலந்து பேசப்படவில்லை.
* இந்த அழிவுக்குரிய திட்டம் யோராமினால் தீட்டப்பட்டிருந்தது.
* அழிப்பதற்கு பதிலாக, கர்த்தர் அவர்களை அவர்கள் மதியீனத்திலிருந்து காப்பாற்றுவார்.

**ஒரு தீர்க்கதரிசி**

அதிர்ஷ்டவசமாக, யோராமைக்காட்டிலும் யெகோவாவைப்பற்றின அறிவில் ஆழமாக வேரூன்றின ஒருவர் இருந்தார். தன் கொள்ளுத்தாத்தாவுக்கெல்லாம் கொள்ளுத்தாத்தாவாயிருந்த தாவீதின் விசுவாசத்தில் கொஞ்சத்தை கொண்டிருந்த யோசபாத், "நாம் கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி கர்த்தருடைய தீர்க்கதரிசி ஒருவரும் இங்கு இல்லையா?" என்று கேட்டான் (வசனம் 11அ; ஒப்பிடுக 1 இராஜாக்கள் 22:7). "ஒருபோதும் செல்லாதிருப்பதை விட, தாமதமாக செல்வது சிறந்தது" என்ற ஒரு பழைய பழமொழி நினைவுக்கு வருகிறது.

தேவனுடைய தீர்க்கதரிசி ஒருவர் அவர்களுடன் இருந்தாரா இல்லையா என்பதை இராஜாக்களில் ஒருவரும் அறிந்திருக்கவில்லை, ஆனால் ஒரு வேலைக்காரன் அறிந்திருந்தார். "எலியாவின் கைகளுக்கு தண்ணீர் வார்த்த சாப்பாத்தின் குமாரனாகிய எலிசா இங்கே இருக்கிறான் என்று இஸ்ரவேல் ராஜாவின் ஊழியக்காரரில் ஒருவன் மறுமொழியாகச் சொன்னான்" (வசனம் 11ஆ). எலிசா ஏன் இராணுவத்தோடு சென்றிருந்தான் என நமக்கு நிச்சயமாக தெரியவில்லை. ஆனால் தேவன் பிரச்சனை உருவாக்கக்கூடும் என்பதை எதிர் பார்த்திருந்து, தம்முடைய தாசன் அந்த காட்சியில் இருக்க விரும்பினார்.[7]

எலிசா யூதாவில் இல்லாமல், இஸ்ரவேலில் ஊழியம் செய்தபோதிலும் யோசபாத் இவரைக்குறித்து கேள்விப்பட்டு, இவரை சர்வவல்லவருடைய தீர்க்கதரிசி என அறிந்திருந்தார். யோசபாத், "கர்த்தருடைய வார்த்தை அவனிடத்தில் இருக்கிறது" என்றார் (வசனம் 12அ). NCV மொழிபெயர்ப்பில் "இவர் கர்த்தருடைய சத்தியத்தைப் பேசுகிறார்" என்றுள்ளது.

சட்டவிதிகளின்படி, ராஜாக்கள் குடிமக்களை தங்களிடத்தில் கொண்டுவரும்படி செய்தியாளர்களை அனுப்பினார்கள். மூன்று ராஜாக்களும் தங்களை தாழ்த்தி எலிசா தங்கியிருந்த "இடத்திற்கு போனார்கள்" (வசனம் 12ஆ) என்பது தண்ணீரில்லாத பாலைவனத்தில் அவர்கள் எவ்வளவு இக்கட்டில் இருந்தார்கள் என்பதை காட்டியது. அது பார்ப்பதற்குறிய ஒரு காட்சியாக இருந்திருக்க வேண்டும்: இராஜா உடையணிந்த மூன்று ராஜாக்கள் தாழ்மையான நிலத்தை பண்படுத்துகிறவர் ஒருவர் முன் நிற்கிறார்கள்.

ஒரு நிமிடம் இந்த சூழ்நிலையைப் பற்றி சிந்தியுங்கள். இங்கே பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் தங்கள் போர் கருவிகளோடு இருந்தார்கள். அந்த இராணுவத்தை காப்பாற்ற நீங்கள் ஒருவரை தெரிந்தெடுத்தால், நீங்கள்

*யாரை தெரிந்தெடுப்பீர்கள்? போர்கருவிகள் இல்லாத, போர் கலையை கற்றிராத ஒருவரை நீங்கள் தெரிந்தெடுப்பது என்பது நிகழ சாத்தியமில்லாததாக இருந்திருக்கும். இருந்தபோதும், அந்த மனிதன்தான் தேவன் பயன்படுத்துபவராய் இருந்தார்.*

## *ஒரு நடைபெற சாத்தியமில்லாத தீர்வு (3:13-19)*

**ஒரு கடிந்து கொள்ளுதல்**

*மூன்று ராஜாக்கள் என் முன் நின்று கொண்டிருந்திருப்பார்களானால், நான் செய்வதறியாது திகைத்துப்போயிருப்பேன் - ஆனால் எலிசா அப்படி இருக்கவில்லை. ராஜாக்களை எதிர்கொள்ளுதல் என்ற நிலை ஏற்பட்டபோது, அவர் தனக்கு முன்பு இருந்தவரைப் போல, அஞ்சாதவராயிருந்தார்.*

*அவர் முதலில் யோராமிடம் பேசினார்: "எனக்கும் உமக்கும் என்ன?" (வசனம் 13அ). "உங்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது?" என்று* CJB*யில் உள்ளது. எலிசா ராஜாவை பார்த்து, "நீ உம்முடைய தகப்பனின் [ஆகாப்] தீர்க்கதரிசிகளிடத்திலும், உம்முடைய தாயாரின் [ஏசபேல்] தீர்க்கதரிசிகளிடத்திலும் போம்" என்றான் (வசனம் 13ஆ). யோராம் பாகாலின் சிலையை அகற்றியதின் மூலம் ஒரு நல்ல காரியத்தை செய்திருந்தார் (வசனம் 2), ஆனால் அவன் பாகால் வழிபாட்டை ஒழிப்பதற்கு உண்மையான முயற்சி எதுவும் எடுத்திருக்கவில்லை (காண்க 10:19). யோராமின் தாயார் யேசபேல் இன்னும் உயிரோடிருந்தாள். அவள் பாகால் வணக்கத்தில் வெறிபிடித்தவளாக இருந்தாள். பாகாலை பின்பற்றினவர்கள் அவன்தான் இயற்கைக்கான கடவுள் என்றும், மழையை கொடுத்தவன் என்றும் நம்பிக்கொண்டிருந்தார்கள் என்பதை நினைவில் வையுங்கள். எலிசா யோராமைப் பார்த்து உண்மையில் சொன்னதென்னவென்றால், "பாகால் உண்மையான தெய்வமாக இருந்தால், நீங்கள் ஏன் அவனிடம் தண்ணீருக்காக போகக்கூடாது? நீங்கள் என்னிடம் வருவதற்கு பதிலாக, அவனுடைய தீர்க்கதரிசிகளிடம் ஏன் போகக்கூடாது?"*

*எலிசாவின் இந்த சவாலின் தொனி இன்று ஒவ்வொரு தேசத்திலும் தொனிக்க வேண்டும். இலட்சக் கணக்கானவர்கள் கர்த்தரை விட்டு விலகி, உலக ஆசை, சிற்றின்பம் மற்றும் வெற்றி என்ற தங்கள் "தெய்வங்களிடம்" போய்விட்டார்கள். மனித இனத்தின் "இரட்சிப்பு" என்பது, அறிவியல், கல்வி மற்றும் தொழில்நுட்பத்தில் இருப்பதாக மற்றவர்கள் நம்புகின்றனர். எப்படி இருந்தாலும், பேரழிவு தாக்கும்போது, நீண்ட காலத்திற்கு முன் பாகால் செயல் அற்று இருந்ததுபோல, இவர்களுடைய நவீன "தெய்வங்களும்" செயல் அற்றவைகளாக இருக்கின்றன. இப்படியாக சிலர், "கர்த்தாவே எங்களுக்கு உதவிசெய்யும்!" என மண்டியிட்டு அவரிடம் கதறும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். "நீங்கள் ஏன் என்னிடம் வருகிறீர்கள்? ஒவ்வொரு நாளும் நீங்கள் 'சேவித்த' உங்கள் 'தெய்வங்கள்' இடம் செல்லுங்கள்! அவைகள் உங்களுக்கு உதவி செய்யட்டும் என அவர் கூறுவாரெனில், அது எவ்வளவு துயரமானதாக இருக்கும்!"*

*எலிசாவின் கடினமான வார்த்தைகள் யோராம் தாழ்மையை கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக அப்படி இருந்தது. அதற்கு அவன், "அப்படியல்ல, கர்த்தர் இந்த மூன்று ராஜாக்களையும் மோவாபியரின் கையில்*

ஒப்புக்கொடுக்கிறதற்கு வரவழைத்தார்" என்றான் (வசனம் 13இ). இந்த பதில் அவன் முந்தி கூறிய கருத்து போலவே இருந்தது (வசனம் 10), ஆனால் நாம் ஒரு வித்தியாசமான வலியுறுத்தலைக் கேட்டிருக்க வேண்டும். ஒருவேளை யோராம் தேவனிடமிருந்து இரக்கத்தை பெற தகுதியற்றவனாக இருந்தான் என்பதை ஒப்புக்கொண்டான் - ஒருவர் அல்ல - *மூன்று* ராஜாக்கள் மிகுந்த நெருக்கடியில் இருந்தார்கள். ஒருவேளை அவர் இப்படிச் சொன்னார், "எனது குற்றங்களுக்காக மற்றவர்களை தண்டிக்க வேண்டாம்." ஒரு பண்டைய மொழிபெயர்ப்பு, "என்னுடைய பாவங்களை நினைக்க வேண்டாமென கெஞ்சுகிறேன், பதிலாக எங்கள் மேல் இரக்கமாயிருக்க கெஞ்சுகிறேன்."[8]

எலிசா இன்னமும் கலங்கின நிலையில் இருந்தார். அதற்கு எலிசா "நான் யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தின் முகத்தை பாராதிருந்தால் நான் உம்மை நோக்கவுமாட்டேன், உம்மை பார்க்கவுமாட்டேன் என்று சேனைகளுடைய கர்த்தருக்கு முன் நிற்கிற நான் அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லு கிறேன்" என்றான் (வசனம் 14). CJBயில் "அல்லது உன்னைக் கவனிக்கவும் மாட்டேன்" என்றுள்ளது.

யோசபாத் பூரணனாக இருக்கவில்லை (காண்க 1 இராஜாக்கள் 22:43ஆ), ஆனால் கர்த்தரில் அடிப்படை விசுவாசத்தை அவன் பராமரித்திருந்தான் (காண்க 1 இராஜாக்கள் 22:43அ; 2 நாளாகமம் 17:3-6; 19:4-11; 20:5-21). மிகவும் முக்கியமாக, அவன் தாவீது ராஜாவின் சந்ததியில் வந்தவனாக இருந்தான். தாவீதின் குடும்பத்தை விட்டு தம்முடைய கிருபை விலகாது இருக்கும் என கர்த்தர் சத்தியம் பண்ணியிருந்தார் (2 சாமுவேல் 7:15, 16). ஒரு நல்ல மனிதருடைய செல்வாக்கு தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தது! இந்த பாடத்திற்கு "மூன்று இராணுவங்களை காப்பாற்றிய மனிதன்" என தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. உள்ளபடி, அந்த இராணுவங்களை காப்பாற்றியதில், எலிசா, யோசபாத் மற்றும் தாவீது ஆகிய *மூன்று* மனிதரின் பங்களிப்பு இருந்தது.

**ஒரு வேண்டுகோள்**

எலிசா ராஜாக்களிடத்தில், "இப்போதும் ஒரு சுரமண்டல வாத்தியக் காரனை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்" என்றான் (2 இராஜாக்கள் 3:15அ) - அதாவது, "கம்பிகள் கட்டப்பட்ட ஒரு கருவியை இசைக்கிறவன்."[9] NIVயில் "ஒரு சுரமண்டலக்காரன்" என்றுள்ளது. எலிசா ஏன் ஒரு சுரமண்டலக்காரன் தேவை எனக்கேட்டார் என நமக்கு தெரியாது. சில சமயங்களில் இசைக்கருவிகள் தீர்க்கதரிசின உரைத்தலோடு தொடர்பு படுத்தி சொல்லப்பட்டுள்ளது. (காண்க 1 சாமுவேல் 10:5; 1 நாளாகமம் 25:3), பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனம் உரைத்தலில், அது ஒரு பிரிக்க முடியாத பகுதியாக இருந்தது என்ற முடிவுக்கு சிலர் வருகிறார்கள். இந்த ஒரு சமயத்தில் மட்டும்தான் எலிசா இப்படி ஒரு வேண்டுகோளை வைத்தார்.

வாழ்நாள் முழுவதும் கர்த்தருக்கு எதிராக ஒரு முரட்டாட்ட வாழ்க்கை வாழ்ந்த யோராம் கர்த்தரை குறிப்பிட்டதால் எலிசா தொல்லைக்கு உள்ளாகி இருந்தார். அலுவலை தொடருவதற்கு முன்பு தன்னை அமைதிபடுத்த விரும்பி இருக்கலாம். தாவீது சவுல் ராஜாவை அமைதிபடுத்த ஒரு இசைக்கருவியை வாசித்தான் (1 சாமுவேல் 16:16, 23), மற்றும் "இசை ஒரு பண்படாத இருதயத்தை அமைதிப்படுத்துகிறது"[10] என்பதை நம்மில் அநேகர் அங்கீகரிக்கிறோம். (இதை

*நான் மாற்றி கூறட்டும்: சில இசை என்னை அமைதிபடுத்துகிறது. ஆனால் நாகரீக "இசை" என அழைக்கப்படுவது எனக்குள் அதற்கு எதிரான பாதிப்பை ஏற்படுத்துகிறது!)*

**ஒரு தேவை**

*சுரமண்டலக்காரனை அழைத்ததில் எலிசாவின் நோக்கம் எதுவாக இருந்திருப்பினும். அது வேலை செய்தது. "சுரமண்ட வாத்தியக்காரன் வந்து வாசித்தபோது, கர்த்தருடைய கரம் அவன் மேல் இறங்கியது" (2 இராஜாக்கள் 3:15ஆ). அதாவது, கர்த்தருடைய ஆவி எலிசாவின் மேல் வந்து, குழப்பத்திற்கு தேவனுடைய தீர்வை கொடுக்கும்படி செய்தது. எது யெகோவாவின் "சாத்தியமில்லாத தீர்வாக இருந்தது"? வாய்க்கால்களை வெட்டுங்கள் என்பதே!*

> *... "கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், இந்த பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள்.[11] நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காணமாட்டீர்கள்; ஆனாலும் நீங்களும் உங்கள் ஆடு மாடுகளும் உங்கள் மிருகஜீவன்களும் குடிக்கும்படிக்கு, இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (வசனங்கள் 16, 17).*

*இதில் சொல்லப்பட்டுள்ள ''ஆடுமாடுகள்'' என்பவைகள் அவர்கள் புசிப்பதற்கு கொண்டு வந்தவைகளாயிருந்தன, "மிருகஜீவன்கள்" என்பவை சுமைசுமப்பவைகளாக இருந்திருக்கலாம். தேவனானவர் எல்லாருக்கும் எல்லாவற்றையும் வழங்குவார்; எல்லாரும் குடிப்பார்கள்.*

*"இது கர்த்தரின் பார்வைக்கு அற்பகாரியம்" என எலிசா சொன்னார் (வசனம் 18அ).* NIV *இல் "இது கர்த்தரின் பார்வையில் ஒரு எளிதான காரியமாயிருக்கிறது" என்றுள்ளது. இது ஒரு "அற்பமான," "எளிதான காரியமாயிருந்தது"? மறுபடியும், இந்த காட்சியை மனதில் வையுங்கள்: வரண்டு வெடித்துப்போன நிலம், சுட்டெரிக்கும் வெயில், கருகிப்போன தாவரங்கள், வாரி இரைக்கும் புழுதி, இருதயம் விடாய்த்துபோன இராணுவம். அநேக மைல்களுக்கு தண்ணீர் இருக்கவில்லை. காற்று அல்லது மழைக்கான எந்த அறிகுறியும் இல்லை. இருப்பினும், பள்ளத்தாக்கை தண்ணீரால்* நிரப்புவது *"சுலபமான காரியம்" ஆக இருந்தது என எலிசா கூறினார். ஆம், "அது* கர்த்தரின் *பார்வை"யில் அப்படி இருந்தது. தேவனிடத்தில் "பெரிய" மற்றும் "சிறிய" அற்புதங்கள் என்றில்லை. அவருடைய பார்வையில் எல்லா அற்புதங்களும் சமமாகவே இருக்கின்றன.*

*இன்று அற்புதங்களைச் செய்வதாக கூறுகிறவர்கள் இந்த கருத்தை புரிந்துகொள்ளவேண்டும். ஒருவர் ''சுலபமான'' (''அந்நியபாஷை'' பேசுதல் போன்ற) அற்புதங்களை செய்ய துவங்கினால், பின்னர் அவரால் "கடினமான" அற்புதங்களை (இல்லாத ஒரு உடல் உறுப்பை உருவாக்குவது அல்லது மரித்தோரை எழுப்புவது போன்ற) செய்ய முடியும் என அவர்கள் வலியுறுத்துகிறார்கள். இவர்கள் உண்மையிலேயே பாஷைகளில் (அவர்கள் படித்திராத பாஷைகளில்) பேசக்கூடுமானால், அவர்களால் மரித்தவர்களையும் உயிருடன் எழுப்பமுடியும். இரண்டிலெதுவும் கர்த்தருக்கு "சுலபமானதாக" இருக்கிறது. அவர்களால் "கடினமான" அற்புதங்களை செய்ய முடியவில்லை*

என்பது, அவர்கள் உண்மையிலேயே “சுலபமான” அற்புதங்களையும் செய்யாமல் இருக்கிறார்கள் என்பதையே நிரூபிக்கிறது.

மேலும் எலிசா, “மோவாபியரையும் உங்கள் கையிலே ஒப்புக்கொடுப்பார்” என்றான் (வசனம் 18ஆ). இத்தருணத்தில், இராணுவம் வெற்றி பெறுவதை அல்ல, தப்பிப்பிழைப்பதையே விரும்பியது. ஆனால் கர்த்தர் அவ்விரண்டையும் வாக்குத்தத்தம் செய்தார். அவர்களுடைய உயிரை காப்பாற்றும் அதே அற்புதம் மோவாபியரின் அழிவுக்கு காரணமாகவும் இருக்கும். ஒரு அற்புதம் இரண்டு நோக்கங்களை நிறைவேற்றும்போது, இரண்டு அற்புதங்களை ஏன் செய்யவேண்டும்?

மோவாபியர்களை அவர்கள் கையில் ஒப்புக்கொடுக்கும் போது, இஸ்ரவேலர்கள், “சகல கோட்டைகளையும் சகல சிறந்த பட்டணங்களையும் தூர்த்து, நல்ல மரங்களையெல்லாம் வெட்டி, நீரூற்றுகளையெல்லாம் தூர்த்து, நல்ல நிலத்தையெல்லாம் கல் மேடுகளாக்கிக் கெடுப்பீர்கள்,” என்றான் (வசனம் 19). ஒரு “நல்லமரம்” என்பது அநேகமாக ஒரு கனிதரும் மரமாக இருந்தது. அந்த நிலத்தை கற்களால் நிரப்புவது என்பது, அந்த நிலப்பரப்பு கற்பாங்கானதாக இருந்தது. நிலத்தில் பயிரிடுவதற்கு முன்பு, கற்களை தோண்டி எடுத்து, அப்புறப்படுத்தி, வயலில் ஒரு மூலையில் குவித்து வைத்தார்கள். இந்தக் கற்களை மீண்டும் நிலத்தில் பரப்பிவிடுவது, அதை பயனற்றதாக மாற்றி விடும். இந்த முறை “எரிந்துபோன நிலக் கொள்கை” எனப்படும்: “எதிரியானவன் பயன்படுத்துவதற்கு எதையும் விட்டு வைக்காதே.” இந்த தண்டனையை பெற மோவாபியர்கள் தகுதியானவர்கள் என தேவன் தீர்மானித்தார்[12] (ஒப்பிடுக ஏசாயா 15 மற்றும் 16).

## ஒரு இணையற்ற வெற்றி (3:20-25அ)

***நிவாரணம்***

ராஜாக்கள் போர்வீரரைக் கொண்டு வாய்க்கால்களை வெட்டியிருந்தார்கள். எலிசாவின் மேலுள்ள நம்பிக்கையினால் யோசபாத் இதை செய்தான். யோராம் அநேகமாக விரக்தியினால் இதைச் செய்தான். அவர்கள் நோக்கம் எதுவாக இருந்திருப்பினும், “மறுநாள் காலமே பலிசெலுத்தப்படும் நேரத்தில், இதோ, தண்ணீர் ஏதோம் தேச வழியாய் வந்ததினால் தேசம் தண்ணீரால் நிரம்பிற்று” (வசனம் 20). ஏதோமின் தூரமான மலைப்பிரதேசத்தில் அநேகமாக கடுமையான புயல்மழை ஏற்பட்டிருந்தது - அந்த தண்ணீர் வடதிசையில் ஓடி. போர்வீரர்கள் முகாம் அமைத்திருந்த இடத்தை நிரப்பியது. அந்த பள்ளத்தாக்கு சவக்கடலை நோக்கி சரிவாக இருக்கிறது என புவியியல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இதனால்தான், வாய்க்கால்களை வெட்டுவது அவசியமாக இருந்தது: தண்ணீர் வடிந்துபோவதற்கு முன் அதை தேக்கிவைக்கவேண்டும். J. T. ஹெட்லி என்பவர் அந்த சம்பவங்களை இவ்விதம் காட்சிப்படுத்துகிறார்:

> பொழுபோயிற்று, இரத்தவருணமான சூரியன் மேகங்கள் இல்லாத வானத்தில் மறைந்தது. அதின் கடைசி ஒளிக்கதிர் அகன்ற தண்ணீரில்லாத பாலைவனத்தில் விழுந்தது. வின்மீன்கள் தோன்றின, அமைதியான வானம் காற்றோட்டம் இல்லாத, தாகத்தில் சோர்ந்து, தூங்கிபோன இராணுவ

முகாம்கள் பக்கமாய் வளைந்திருந்தது. அவர்களைச் சுற்றி சகலமும் அமைதியாக இருந்தபோது, தூரத்திலிருந்த மலைகளில் மேகம் வெடித்து, கனமழை கொட்டியது. மழைத்தண்ணீர் கீழ் முகமாய் ஓடிவந்து, காய்ந்த வாய்க்கால்களை, ஓடைகளை நிரப்ப வெள்ளம் உருவாக, பள்ளத்தாக்கின் வழியாக வெள்ளநீர் பாய்ந்து கொண்டிருந்தது. எக்காள ஒலி போர்வீரர்களை அவர்கள் உறக்கத்திலிருந்து எழுப்ப, அவர்கள் கண்ணுக்கு எட்டியதூரம் எல்லாம் தண்ணீரை கண்டார்கள். காலை காற்றில் உறத்த சத்தம் கேட்க, அவர்கள் தங்கள் தகனிக்கும் தாகத்தை தீர்க்க - தண்ணீர்பருக விரைந்து ஓடினார்கள்.[13]

"மறுநாள் காலமே பலி செலுத்தப்படும் நேரத்தில்" (வசனம் 20) நடந்த சம்பவங்களின் விளக்கம் முக்கியமானது. சூரிய உதயத்தில், எருசலேம் தேவாலயத்தில், அந்த நாளின் முதல் பலியிடும் வேளையை இது குறிப்பதாக பலர் ஒப்புக்கொள்கிறார்கள். அநேகமாக, நேரத்தை குறிப்பதற்கு இந்த வார்த்தைகள் சேர்க்கப்பட்டிருக்கலாம். அப்படியானால், "சூரிய உதயத்தின் போது" என்று சொல்வது எளிதாக இருந்திருக்கும். எழுத்தாளர் எருசலேமில் ஆசாரியர்கள் செய்து கொண்டிருந்ததையும் கர்த்தர் ஏதோமின் வனாந்தரத்தில் செய்து கொண்டிருந்ததையும் தொடர்புபடுத்துகிறார். எனது தேசத்தில் நான் ஏறெடுக்கும் ஜெபம் நூற்றுக்கணக்கான, ஏன் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள தேசத்தின் சம்பவங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அறிவது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது!

**தெய்வீக தண்டனை**

வாக்குத்தத்தத்தின் முதல் பகுதி நிறைவேறிவிட்டது. இராணுவத்திற்கு தண்ணீர் கிடைத்துவிட்டது. இப்போது மோவாபியர் அவர்கள் கையில் கொடுக்கப்படுவார்கள் என்ற வாக்குத்தத்தத்தின் இரண்டாவது பகுதியை பற்றி என்ன? இஸ்ரவேல் இராணுவம் மோவாபை நோக்கி முன்னேறி சென்றபோது, "தங்களோடு யுத்தம் பண்ண ராஜாக்கள் வருகிறதை மோவாபியரெல்லாரும் கேள்விப்பட்டார்கள்." அவர்கள் உடனே எல்லாரையும் கூட்டிச் சேர்த்து, யுத்தம் செய்ய எல்லையில் நின்றார்கள் (வசனம் 21). தங்களை விரைவில் தாக்குவதற்கு சமவெளியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தை கண்ட போது பயப்பட்டார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

தண்ணீரால் வாய்க்கால்கள் நிரம்பியிருந்த அந்த காலையில், மோவாபிய வீரர்கள் "அதிகாலையில் எழுந்து," எதிரிபடையினர் முகாம் அமைத்திருந்த பள்ளத்தாக்கை பார்த்தார்கள். அவர்கள் தண்ணீரை பார்த்தார்கள், ஆனால் அந்த காட்சியை தவறாக அர்த்தப்படுத்தினார்கள். "சூரியன் தண்ணீரின் மேல் பிரகாசித்ததினால்," "அந்த தண்ணீர் அவர்களுக்கு இரத்தம்போல் சிவப்பாய் காணப்பட்டது" (வசனம் 22). தண்ணீர் சேற்றுடன் கலந்ததால் ஒரு வேளை சிவப்பாய் தோன்றியது. ஒருவேளை பள்ளத்தாக்கை சுற்றியிருந்த சிவப்பு மலை முகடுகளின் ஒளிபிரதிபலிப்பை அவர்கள் பார்த்தார்கள். ஒருவேளை சூரிய உதயத்தின் காட்சியை தண்ணீர் பிரதிபலித்திருக்கலாம்.

மோவாபியர்கள் தாங்கள் கண்டது தண்ணீர்தான் என்பதை நம்புவதற்கு காரணமில்லாதிருந்தது. அந்த ஆறு வறண்டு போயிருந்தது மற்றும் அதற்கு

*முந்தைய இரவில் மழை பெய்யவில்லை என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள் (வசனம் 17). எப்படியிருந்தாலும், அதை இரத்தம் என நம்புவதற்கு காரணம் இருந்தது. அவர்கள் எதிர்கொண்ட இராணுவகூட்டணி அசாதாரணமானது, சாதாரணமாக ஒருவருக்கொருவர் பகையாளிகளாக இருந்த நாடுகளை கொண்ட ஒரு கூட்டணியாக இருந்தது. "அதினால் அவர்கள்: இது இரத்தம், அந்த ராஜாக்கள் தங்களைத் தாங்களே வெட்டிக்கொண்டு மாண்டுபோனார்கள்" என்று அவர்கள் முடிவு செய்தனர் (வசனம் 23அ). மோவாபியர்கள் சமீபத்தில் யூதாவின்மேல் படையெடுத்தபோது தனிப்பட்ட முறையில் இப்படிப்பட்ட ஒரு அனுபவம் ஏற்பட்டது (2 நாளாகமம் 20:23) அவர்கள் இப்படிப்பட்ட ஒரு முடிவுக்குவரக் காரணமாய் இருந்தது.*

*மோவாபியர்கள் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் சத்தமிட்டு, "மோவாபியரே, கொள்ளைக்கு வாருங்கள்!" என்று சொன்னார்கள் (வசனம் 23ஆ). அவர்கள் தங்கள் கேடயங்களையும், பட்டையங்களையும் கீழேபோட்டுவிட்டு, கவனமின்றி இஸ்ரவேலரின் முகாமை நோக்கி ஓடுவதை நான் பார்க்க முடிகிறது. பட்டயங்கள் உறையிடப்பட்டிருந்தன, அவர்கள் மனம் யுத்தத்தின் மேல் இல்லாமல், யுத்த கொள்ளையின் மேல் இருந்தது. அவர்கள் கண்கள் ஆபத்து எங்கே இருக்கிறது எனத் தேடவில்லை, ஆனால் செல்வங்களைத் தேடின. அவர்கள் தாக்குதலை குறித்து கரிசனையாய் இராமல், முகாமை கொள்ளையிடுவதில் கரிசனையாய் இருந்தார்கள்.*

*அதே நேரத்தில், இஸ்ரவேலர் தங்கள் தாகத்தை தணித்துக் கொண்ட பிறகு, பதுங்கியிருந்து தாக்குவதற்கு (அநேகமாக எலிசாவின் அறிவுரைப்படி) ஒளிந்து கொண்டிருந்தார்கள். கொஞ்சமும் சந்தேகப்படாமல் எதிரி படைவீரர்கள் தங்கள் முகாமுக்குள் நுழைந்தபோது, "இஸ்ரவேலர் எழும்பி, மோவாபியரைத் தங்களுக்கு முன்பாக ஓடிப்போகத்தக்கதாய் முறியடித்தார்கள்" (வசனம் 24அ). திடீரென, சமவெளிப்பகுதியில் உண்மையான இரத்தம் வழிந்தோடியது. "அவர்கள் தேசத்திற்குள் புகுந்து, அங்கேயும் மோவாபியரை முறியடித்தார்கள்" (வசனம் 24ஆ). இஸ்ரவேலர்கள் மோவாபுக்குள் உட்புகுந்தபோது, "எதிரிக்கு ஒன்றும் விட்டுவைக்க வேண்டாம்" என்ற கொள்கையை, தங்களுக்கு கட்டளையிட்டபடி செய்துமுடித்தார்கள் (வசனம் 25அ).*

## *ஒரு எதிர்பாராத பின் விளைவு (3:25ஆ-37)*

*ஒரு வெற்றி குறிப்போடு இந்த கதையை இங்கே முடிப்பது நலமாக தோன்றும். எப்படியிருப்பினும், வெற்றியானது கையிலிருந்து நழுவி விட்டதுபோல, ஒரு எதிர்பாராத பின்விளைவும் இருந்தது.*

*வென்றெடுத்த இஸ்ரவேலர்கள் கிராரேசேத்தை அடைகிறவரை முன்னெறிச் சென்றனர் (வசனம் 25ஆ). "முடிவாக, கற்சுவர்களுக்கு பின்னால் இருந்த கிராரேசேத் பட்டணம் மட்டும் மிஞ்சியிருந்தது" என* CJB *வேதாகமம் கூறுகிறது. சவக்கடலிலிருந்து கிழக்கில் பதினொரு மைல் தொலைவிலுள்ள இன்றைய கிராக் என்ற இடத்தோடு கிராரேசேத் தொடர்புபடுத்தப்படுகிறது (வரை படத்தை காண்க). "கிராரேசேத் என்பது மோவாபியரின் அரணான பட்டணங்களில் மிக முக்கியமானதாக இருந்தது"[14] (காண்க ஏசாயா 15:1; 16:7, 11; எரேமியா 48:36).* G. *ராலின்சன் என்பவர் கீழ்வரும் விளக்கத்தை தருகிறார்:*

சூழ்நிலை மிகவும் வலிமையானது. கோட்டை சுவரானது செங்குத்தான மலையின் மேல் கட்டப்பட்டது, எல்லா புறங்களிலும் ஆழமான குறுகலான பள்ளத்தாக்குகளால் சூழப்பட்டிருந்தது, அந்த மலைகள் கோட்டைகளைவிட உயரமானவைகளாய் இருந்தன. மோவாபியர்கள் பெற்றிருந்த பண்டைய நிலப்பரப்பில், சந்தேகத்திற்கு இடமில்லாமல், இதுதான் மிகவும் வலிமையான ஒரு இடமாக இருந்தது.[15]

இஸ்ரவேலின் கவண்காரர்கள் அப்படிப்பட்ட கோட்டையின் மேல் சிறிதளவே பாதிப்பை ஏற்படுத்தி இருக்க முடியும் (2 இராஜாக்கள் 3:25இ).

**நம்பிக்கையற்ற நிலை**

மோவாபின் ராஜாவாகிய மேசா, கிராரேசேத் கோட்டைக்குள் பின்வாங்கிவிட்டான். அவன் ஒரு துணிச்சலான முடிவை எடுத்தான்: "யுத்தம் மும்முரமாகிறதென்று மோவாபியரின் ராஜா கண்டபோது, அவன் ஏதோமின் ராஜாவின்மேல் வலுமையாய் விழுகிறதற்குப் பட்டயம் உருவுகிற எழுநூறுபேரைக் கூட்டிக்கொண்டு போனான்" (வசனம் 26அ). ஏதோமியரின் படை ஒரு பெலவீனமான நிலையில் இருந்தது என ஒருவேளை அவர் நினைத்தார். மேலும் அவர் ஏதோம், மோவாபைப்போல ஒரு அடிமை நாடாக இருந்ததால், தனக்காக யுத்தம் செய்ய ஏதோம் ராஜாவை அமர்த்த முடியும் என நினைத்தார்.

அந்த முயற்சி தோல்வி அடைந்தபோது (வசனம் 26ஆ), மேசா ஒரு அதிர்ச்சியான (தேவனுடைய பிள்ளைகளுக்கு அதிர்ச்சியான) காரியத்தை செய்தார்: "அப்பொழுது அவன் தன் ஸ்தானத்தில் ராஜாவாகப்போகிற தன் சேஷ்டபுத்திரனைப் பிடித்து, அலங்கத்தின் மேல் அவனை சர்வாங்க தகனமாக பலியிட்டான்" (வசனம் 27) - மோவாபியரின் "அருவருப்பாகிய"/விக்கிரகமாகிய காமோசுக்கு பலியிட்டான் (காண்க எண்ணாகமம் 21:29; 1 இராஜாக்கள் 11:7, 33; 2 இராஜாக்கள் 23:13; எரேமியா 48:7, 13, 46). அஞ்ஞானிகள் தங்கள் யுத்தத்தின் தோல்விக்கு, தங்கள் "தெய்வங்கள்" கோபமாயிருந்தது தான் காரணம் என நம்பினர். அவைகளின் கோபத்தை தணிப்பதற்கு ஒரு வழி மனித பலி கொடுப்பதாகும். மேசாவின் தோல்வி நாசகரமானதாக இருந்தது, காமோசு தன் மேல் மிகவும் கோபமாயிருந்தது தான் இதற்கு காரணம் என்று முடிவுக்கு வந்தான். ஆகவே, அவன் தனக்குப்பின் தன் பட்டத்து இளவரசனாக வரவேண்டியவனை பலி கொடுக்க தெரிந்தெடுத்தான்! தேவனுடைய பிரமாணம் இப்படிப்பட்ட செயல்களை தவறு என கண்டித்துள்ளது (காண்க லேவியராகமம் 18:21; 20:3; எரேமியா 7:31), ஆனால் கர்த்தரை அறியாதவர்களின் இருதயத்தில் இருள் பெரிதாயிருக்கிறது.

**பேரழிவு**

அந்த வேதனையான காட்சியிலிருந்து நான் ஏமாற்றமான பின்விளைவுகளுக்கு விரைந்து போகட்டும். 2 இராஜாக்கள் 3:27ஆ வின்படி, "அப்பொழுது இஸ்ரவேலர் மேல் கடுங்கோபம் மூண்டதினால், அவர்கள் அவனை [மோவாப் ராஜா] விட்டுப் புறப்பட்டு, தங்கள் தேசத்திற்குத் திரும்பிவிட்டார்கள்." "கடுங்கோபம்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ள

எபிரெய வார்த்தை "கோபம்" (CJB) அல்லது "ஆத்திரம்" (NIV) என மொழிபெயர்க்கப்படக்கூடும். இந்த வார்த்தையின் அர்த்தம் தொடர்பாக விளக்கவுரையாளர்கள் ஒத்துப்போகாதிருக்கிறார்கள். சிலர் "கடுங்கோபம்/ கோபம்/ஆத்திரம்" என்பவைகள் மோவாபியரின் கடுங்கோபமாயிருந்தது, மேசாவின் செயலால் தூண்டப்பட்டு இஸ்ரவேலரை விரட்டி அடித்தார்கள் என நினைக்கின்றார்கள்.

மற்றவர்கள் "கடுங்கோபம்" என்ற வார்த்தை அந்த அருவருக்கத்தக்க செயலை பார்த்த இஸ்ரவேலரின் செயல் விளைவாய் இருந்தது - அவர்கள் எதை பார்த்தார்களோ அதினால் தொல்லைபடுத்தப்பட்டு, வெறுப்புடன் திரும்பிவிட்டார்கள் என கூறுகிறார்கள். ஹெரால்டு ஸ்டிகர்ஸ் என்பவர் பின்வருமாறு ஆலோசிக்கிறார். "இஸ்ரவேல் தன் விக்கிரக வழிபாட்டிலிருந்து ஏன் திரும்ப வேண்டும் என்பதற்கு அந்த செயல் ஒரு சரியான பாடமாக அமைந்தது. ஆசிரியருக்கு இவ்விதமாக கேட்க தோன்றுகிறது: இஸ்ரவேல் இந்த சம்பவத்தால் ஆழமாக உணர்த்தப்பட்டிருக்குமானால், தன் சொந்த விக்கிரக வழிபாட்டை விட்டுவிடும்படி, அது ஏன் போதுமான அளவு அதிர்ச்சியடையவில்லை?"[16]

எப்படி இருந்தாலும், C. F. கெயில் மற்றும் டெலிடெஸ் ஆகியோர் இப்படி சுட்டிக்காட்டுகிறார்கள். "இந்த சொற்றொடர் வருகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும்," இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள எபிரெய வார்த்தையானது "மனிதன் பாவம் செய்வதால், தன் மீது தானே வரவழைத்துக் கொள்ளும் *தெய்வீகமான* தண்டனையைகுறிக்கிறது."[17] இது உண்மையாக இருக்கும் பட்சத்தில், மோவாப் ராஜா அந்த வெறுக்கத்தக்க செயலை செய்யும் அளவுக்கு அவரை "நிர்ப்பந்தித்த" இஸ்ரவேலின் மேல் கோபமாயிருந்தார் என்ற முடிவுக்கு சிலர் வருகின்றனர். தேவன் என்ன செய்யும்படி சொன்னாரோ, அதைத்தான் இஸ்ரவேலர் செய்தார்கள். (ஒப்பிடுக வசனம் 19 மற்றும் 25) ஆகவே இந்த விளக்கம் நியாயமானதாக தெரியவில்லை. மேலும் சிலர், யோசபாத் விக்கிரக நாடான வடபகுதி இஸ்ரவேலோடு மற்றொரு கூட்டணி அமைத்தது கர்த்தருக்கு பிரியமாயிருக்கவில்லை என ஆலோசிக்கின்றனர் - இது ஒரு காரணியாக இருந்திருக்கலாம்.

இன்னும் ஒரு சாத்தியக் கூறை நான் சொல்லட்டும். முரட்டாட்ட குணமுள்ள இஸ்ரவேலின் ராஜாவாகிய யோராமின் நிமித்தம் கடைசியாக, தேவ கோபம் இஸ்ரவேலின் மேலும் வந்தது. தேவன் யோசபாத்தினிமித்தம் இராணுவத்திலிருந்தவர்களின் உயிரை காப்பாற்றினார். தேவன் மோவாபியர் மேல் நீதியான தண்டனையை செலுத்த இராணுவ வீரர்களைக் கூட பெலப்படுத்தினார். இதை மனதில் வையுங்கள். யோராமின் படையெடுப்பு நோக்கம், மோவாபியரை மீண்டும் தனது இராஜ்யத்திற்கு வரி செலுத்தும்படி நிர்ப்பந்திப்பதாகும். தேவன் அந்த அளவுக்கு செல்ல விரும்பவில்லை. அப்படியாக, ஒரு முழுவெற்றி பெறாத நிலையில் தேவன் இராணுவத்தை பின்னுக்கு திரும்பவைத்தார். மோவாப் கல்வெட்டில், மேசா இந்த போரில் வென்றதாக கூறுகிறார். நமக்கு தெரிந்த வரை, மோவாப் மறுபடியும் ஒருபோதும் இஸ்ரவேலுக்கு வரி செலுத்தவில்லை. இங்கே நாம் கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பாடம் இருக்கிறதா? ஆம், இந்த பாடம் இருக்கிறது: ஒரு தேவ பக்தியற்ற மனிதர் ஒரு பேரழிவை கொண்டு வருகையில், ஒரு தேவ பக்தியுள்ள மனிதர் ஒரு கூட்டு முயற்சிக்கு வெற்றியை கொண்டுவர முடியும் (வசனம் 14).

## முடிவுரை

*எலிசாவின் வாழ்வில் நிகழ்ந்த இந்த சம்பவத்திலிருந்து அநேக சத்தியங்கள் கற்றுக்கொள்ளப்படக்கூடும். ஆனால் நான் மூன்று சத்தியங்களை குறிப்பிட விரும்புகிறேன்.*

- *தேவன்தான் ஒரு தேசத்தின் பெலனாக இருக்கிறார் (வசனம் 13).*
- *தேவபக்தியுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் ஒரு தேசத்தின் நம்பிக்கையாய் இருக்கிறார்கள் (வசனம் 14).*
- *ஜெபம் ஒரு தேசத்தின் உயிரோட்டமாக இருக்கிறது (வசனங்கள் 11, 20அ).*

*இந்த மறுக்க இயலாத சத்தியங்கள் சில ஆத்தும பரிசோதனை செய்யும் கேள்விகளை கேட்க தூண்டவேண்டும்: நாம் கர்த்தரை சார்ந்து கொள்கிறோமா - அல்லது நாம் நமக்கென உருவாக்கின நம் சொந்த "தெய்வங்களை" சார்ந்து கொள்கிறோமா? நமது தேசத்தை ஆசீர்வதிக்கிற வகையான ஆண்கள் மற்றும் பெண்களாக நாம் உள்ளோமா அல்லது அதின் மேல் சாபத்தை கொண்டு வருகிறோமா? அழிவு நம்மை தாக்கும் போது, நாம் எங்கே திரும்புகிறோம்? சர்வ வல்லவரின் சித்தத்தை நாம் அறிந்து கொள்ள தேடுகிறோமா?*

## பிரசங்கியார் மற்றும் ஆசிரியர்களுக்கான குறிப்புகள்

*இந்த பாடத்திற்கு சாத்தியமான மற்றொரு தலைப்பு, "தேவனுக்கு சுலபமான காரியம்." இந்த பாடம் ஒரு பிரசங்கமாக பயன்படுத்தப்படுமானால், இதில் பயன்படுத்தப்பட்டுள்ள பல வசனங்களை ஒரு அழைப்பை அறிமுகப்படுத்த பயன்படுத்தமுடியும். உதாரணமாக, எலிசா "எனக்கும் உமக்கும் என்ன?" என கேட்டார் (வசனம் 13அ). இது இயேசு கிறிஸ்துவினுடைய அதிர்ச்சியான வாக்கியங்களை நமக்கு நினைப்பூட்டுகிறது. "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள்" (மத்தேயு 7:23). நியாயத்தீர்ப்பு நாளில், "எனக்கும் உனக்கும் என்ன? என்னைவிட்டு அகன்றுபோ, நான் ஒருக்காலும் உன்னை அறியேன்" என கேள்விப்படுவது பயங்கரமாய் இருக்குமல்லவா? நீங்கள் திருமுழுக்கு பெறவேண்டிய உணர்வடைந்த ஒரு விசுவாசியாக இருந்தால் (நடபடிகள் 2:38) அல்லது திருப்பப்படவேண்டிய தவறிழைத்த ஒரு கிறிஸ்தவராக இருந்தால் (காண்க கலாத்தியர் 6:1; நடபடிகள் 8:22), இன்றே அதை செய்யுங்கள்!*

*2 இராஜாக்கள் 3:11இல் உள்ள கேள்வி "கர்த்தருடைய தீர்க்கதரிசி ஒருவரும் இல்லையா" என்ற தலைப்பிலான பிரசங்கத்திற்கு வசனப்பகுதியாக பயன்படுத்தலாம். இந்த மூன்று ராஜாக்களும் கர்த்தரிடமாய் திரும்பவேண்டிய அவசியம் இருந்தது. அப்படியே, இன்றுள்ள எல்லா அரசியல் தலைவர்களும் செய்ய வேண்டியது அவசியமாய் உள்ளது. இருப்பினும், இதை அவர்களோடு மாத்திரம் நாம் மட்டுப்படுத்தவேண்டாம். நாம் எல்லாரும் நமது பிதாவாகிய தேவனையும் அவருடைய வசனத்தையும் சார்ந்துகொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். யோராம் தேவனுடைய சித்தத்தை தீர்மானிக்க வழிவகை இல்லை என்பது போல் நடந்துகொண்டான் - ஆனால் அப்படிச் செய்ய வழி இருந்தது. இன்று மக்கள் தங்கள் வாழ்வுக்கான தேவ சித்தத்தை அறிந்து கொள்ள வழி*

*இல்லை என்பது போல் நடந்து கொண்டு இருளில் இடறுகிறார்கள். இருப்பினும் அதை அறிந்து கொள்வதற்கு ஒரு வழி இருக்கிறது: அது வேதாகமம். அதேபோல், பிரச்சனையில் அகப்பட்டுக்கொள்ளும்போது, தீர்வுக்காக எங்கு செல்வது என்பதை அறியாதிருக்கிறார்கள். அவர்கள் ஜெபத்தின் வாயிலாக தேவனிடத்தில் செல்லமுடியும் என்பதை அறியாதிருக்கிறார்கள். ''என் பிரச்சனைகள் மிகவும் மோசமானவைகள்,'' ''எனக்கு கர்த்தரால் கூட உதவமுடியுமா என நிச்சயமாக தெரியவில்லை'' என எதிர்ப்பவர் இருக்கிறார்கள். உங்கள் பிரச்சனைகளில் உங்களுக்கு உதவி செய்வது தேவனுக்கு "அற்பகாரியம்" (வசனம் 18), ஒரு "சுலபமான காரியம்" (*NIV*), என்பதை புரிந்து கொள்ளுங்கள்.*

---

குறிப்புகள்

[1]*ஒரு பண்டைய கறுப்பு நிற உப்புபடிவங்களால் உருவான மோவாபிய கல் வெட்டு (ஆகாபின் தந்தை) ஒம்ரியின் காலத்திலிருந்து மேசா இஸ்ரவேலுடன் செய்த போர்கள் குறித்து கூறுகிறது - அவை மேசாவின் கோணத்தில் சொல்லப்பட்டுள்ளன. கல்வெட்டிலுள்ள எழுத்துக்களின் கடைசி வரிகள் அநேகமாக 2 இராஜாக்கள் அதிகாரம் 3ல் குறிப்பிடப்பட்டுள்ள போரை குறிக்கிறது. இதில் மேசா தான் வெற்றிபெற்றதாக அறிவித்துக் கொள்கிறான். [2]மற்றொரு காரணம் யோசபாத் தனது மகன் யோராம்* (Jehoram) *ஆகாபின் மகள் யோராமின்* (Joram) *சகோதரி அத்தாளியாளை திருமணம் செய்ய அனுமதித்திருந்தான். யோராம் ஒரு அர்த்தத்தில் இப்படியாக யோசபாத்தின் "குடும்பமாக" இருக்கிறான் (காண்க 2 இராஜாக்கள் 8:24-27; 2 நாளாகமம் 18:1). [3]ஏதோம் ஒரு அடிமை நாடாக இருந்தபடியால், அதற்கென ஒரு ராஜா இருக்கவில்லை. மாறாக, யோசபாத்தால் ஒரு துணைநிலை ஆளுநர் அங்கு நியமிக்கப்பட்டிருந்தார். இந்த ஆளுநருக்கு "ராஜா" என்ற கவுரவப்பட்டம் கொடுக்கப்பட்டிருந்தது (காண்க 1 இராஜாக்கள் 22:47).* [4]C. F. Keil and F. Delitzsch, "1 and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendriksen Publishers, 1989), 303. [5]*இந்த தகவல் 9 அக்டோபர் 2003 அன்று நடந்த* CBS *தொலைகாட்சி நிகழ்ச்சியில் அறிவிக்கப்பட்டது. [6]குர்மாச்சுர் "கழுதைகள்" என்பதற்கு பதிலாக "ஒட்டகங்கள்" என குறிப்பிட்டுள்ளார். ஆனால், வல்லுனர்கள் இஸ்ரவேலர்கள் ஒட்டகங்களை பயன்படுத்தி யதை சந்தேகிக்கின்றனர்.* F. W. Krummacher, *Elisha, a Prophet for Our Times* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1993), 32. [7]*முன்பு கூறியபடி, எலிசா எலியாவின் பிரதிநிதியாக வந்திருந்தார் என்பது சாத்தியமானது. அப்படியானால், கர்த்தர் எலிசாவை அனுப்பும்படி எலியாவுக்கு உத்தரவு கொடுத்திருந்தார்.* [8]Adam Clarke, *The Holy Bible with a Commentary and Critical Notes,* vol. 2, *Joshua - Esther* (New York: Abingdon-Cokesbury Press, n.d.), 488. [9]Donald J. Wiseman, *1 and 2 Kings: An Introduction and Commentary,* Tynadale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1993), 200. [10]William Congreve (1670-1729), *The Mourning Bride* [1697], I.1; quoted in John Bartlett, *Bartlett's Familiar Quotations*, 16th ed., ed. Justin Kaplan (Boston: Little, Brown, and Co., 1992), 291.

[11]*ஆரம்பகால எபிரேய வசனபகுதியில் சில வித்தியாசங்கள் இருக்கின்றன.* RSV*இல் "கர்த்தர் சொல்லுகிறதாவது, நான் இந்த வறண்ட ஆற்றுப்படுகையை குளங்கள் நிறைந்ததாக மாற்றுவேன்" என்றுள்ளது. பெரும்பாலான மொழிபெயர்ப்புகள்* NASB*க்கு இசைவாக உள்ளன. [12]வனாந்திர யாத்திரை காலத்தில் இருந்தே மோவாபியர்கள் இஸ்ரவேலருக்கு விரோதிகளாக இருந்தனர் (காண்க எண்ணாகமம் 22-25).*

[13]J. T. Headley, *Sacred Heroes and Martyrs,* rev. and ed. J. W. Kirton (London: Ward, Lock, & Tyler, n.d.), 191. [14]G. Rawlinson, "2 Kings," *The Pulpit Commentary,* vol. 5, ... *Kings,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 46. [15]Ibid. [16]Harold Stigers, "2 Kings," *The Wycliffe Bible Commentary,* ed. Charles F. Pfeiffer (Nashville: Southwestern Co., 1962), 343-44. [17]Keil and Delitzsch, 307. (Emphasis mine.)

